# FORM-3
# MINUTES OF THE COUNCIL MEETINGS
## (See rule 5 and Serial Number 3 of Appendix - I)
## குளச்சல் நகராட்சி

குளச்சல் நகராட்சி மன்றத்தின் அவசரக்கூட்டம் 2012 நவம்பர் திங்கள் 16.11.2012–ம் நாள் வெள்ளிக்கிழமை பிற்பகல் 3.00 மணிக்கு நகர்மன்ற கூட்ட அரங்கில் வைத்து நடைபெற்றது.

முன்னிலை:
நகர்மன்ற தலைவர்
குளச்சல் நகர்மன்றம்.

**பொருள் எண். 1**
**குளச்சல் நகர்மன்ற தலைவர் அவர்கள் கொண்டுவரும் தீர்மானம்**

குளச்சல் நகராட்சி பகுதியில் உள்ள **ARS** நியாயவிலை கடை பெரியபள்ளி ரோட்டில் தனியார் கட்டிடத்தில் இயங்கி வருவதால், மேற்படி கடையினை பாராளுமன்ற உறுப்பினர் உள்ளூர் தொகுதி மேம்பாட்டு திட்டத்தின்கீழ் பள்ளிரோட்டில் கட்டப்பட்ட அரசு கட்டிடத்தில் இடமாற்றம் செய்யவும், மற்றும் நெசவாளர் தெருவில் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு திட்டத்தின்கீழ் கட்டப்பட்ட கட்டிடத்திலும் அந்த பகுதியை சார்ந்த மக்களுக்கு பயன்பெறும் வகையில் நியாயவிலை கடை நடத்திட தீர்மானம் நிறைவேற்றி, மாவட்ட வட்ட வழங்கல் அதிகாரியிடம் கடிதம் வழங்க மன்றம் தீர்மானிக்கலாம்.

**தீர்மானம் எண்.415. ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 2**

குளச்சல் நகராட்சிக்குட்பட்ட பகுதியில் உள்ள அனைத்து பள்ளிகளிலும் மாணவ, மாணவியருக்கு LCD புரொஜெக்டர் மூலம் டெங்கு பற்றிய திரைப்பட C.D-யினை ஒளிப்பரப்பு செய்ய உத்தேச செலவு ரூ.71,500/– க்கு குறுகிய கால ஒப்பந்தப்புள்ளி கோர 11.10.2012 –ல் நகர்மன்றத் தலைவரின் முன்அனுமதி பெற்றுள்ளதன் அடிப்படையில் 19.10.2012–ல் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்க்காணும் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டுள்ளன. அவை பின்வருமாறு :

| | | |
|---|---|---|
| 1. | திரு.J.ஜாண் பிராங்கிளின்<br>காப்புவிளை, வேர்க்கிளம்பி. | நாள் ஒன்றிற்கு<br>ரூ. 5,500/– |
| 2. | திரு. மாணிக்க ராஜ்,<br>ஆன்டார் டெக்னாலஜி,<br>39A/2. திருவனந்தபுரம் ரோடு,<br>பாளையங்கோட்டை. | நாள் ஒன்றிற்கு<br>ரூ. 5,750/– |

மேற்காணும் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் திரு.J.ஜாண் பிராங்கிளின் என்பவர் குறைவான ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ளார். இந்நகராட்சி பகுதியில் டெங்கு காய்ச்சல் விழிப்புணர்வின் அவசியத்தை கருத்தில் கொண்டு குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள திரு.J.ஜாண் பிராங்கிளின் என்பவரின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் அங்கீகரிக்கலாம்.

<u>அ.குறிப்பு</u>: டெங்கு காய்ச்சல் விழிப்புணர்வின் அவசியம் மற்றும் பொது சுகாதார நலன் காக்கும் பொருட்டு உத்தேச செலவினம் ரூ.71,500/– க்கு நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொண்டமைக்கும், குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள திரு.J.ஜாண் பிராங்கிளின் என்பவரின் ஒப்பந்தப்புள்ளியை அங்கீகரித்தும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்.349/2010/எச்1)

**தீர்மானம் எண்.416. அலுவலக குறிப்பு ஏற்று கொள்ள ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 3**

இந்நகராட்சிக்குட்பட்ட KSSS காலனியில் கதவு எண்.4/705–யில் வரி நிலுவை அதிகம் இருந்த காரணத்தினால் குடிநீர் குழாய் இணைப்பு துண்டிப்பு செய்யப்பட்டது. தற்போது மனுதாரர் வரி நிலுவைத் தொகை முழுவதையும் செலுத்தி விட்டு மீண்டும் இணைப்பு வழஙக கோரியுள்ளார். எனவே மனுததரர் வேண்டுகோள் ஏற்று மீண்டும் இணைப்பு வழஙக மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு** : மன்றம் அனுமதி வழங்கலாம். (ந.க.எண்.2042/2007/அ1)

**தீர்மானம் எண்.417. அலுவலக குறிப்பு ஏற்று கொள்ள ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 4**

இந்நகராட்சியில் நடைபெற்று வரும் திட்டப்பணிகள் தொடர்பான லிளம்பரத்தை தினத்தந்தி தொழில் மலரில் வெளியிட்ட வகையில் ரூ.17,365/–ஐ செலுத்த கேட்டு சம்மந்தப்பட்ட அலுவலகத்திலிருந்து பட்டியல் பெறப்பட்டுள்ளது. எனவே மேற்படி தொகையினை செலுத்துவதற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அ.குறிப்பு</u>**: மன்றம் அனுமதி வழஙகலாம். (ந.க.எண்.2045/2012/இ1)

**தீர்மானம் எண்.418. அலுவலக குறிப்பு ஏற்று கொள்ள ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 5**

இந்நகராட்சிக்குட்பட்ட அண்ணாசிலை ஜங்சன், காந்தி ஜங்சன், பீச் ஜங்சன் மற்றும் பெரியபள்ளி வாசல் ஜங்சன் ஆகிய பகுதிகளில் பாராளுமன்ற உறுப்பினர் உள்ளூர் தொகுதி மேம்பாட்டு திட்டம் 2012–13–ன்கீழ், ரூ.10.00 இலட்சம் மதிப்பீட்டில் சிறிய உயர் கோபுர மின்விளக்குகள் அமைக்கும் பணிக்காக 04.10.2012–ல் கோரப்பட்ட ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பை மாலை மலர் நாளிதழில் வெளியிட்ட வகையில் ரூ.924/– ஐ செலுத்த கேட்டு சம்மந்தப்பட்ட அலுவலகத்திலிருந்து பட்டியல் பெறப்பட்டுள்ளது. எனவே மேற்படி தொகையினை செலுத்துவதற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அ.குறிப்பு</u>**: மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்.2924/2012/இ1)

**தீர்மானம் எண்.419. அலுவலக குறிப்பு ஏற்று கொள்ள ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 6**

இந்நகராட்சிக்குட்பட்ட அண்ணாசிலை ஜங்சன், காந்தி ஜங்சன், பீச் ஜங்சன் மற்றும் பெரியபள்ளி வாசல் ஜங்சன் ஆகிய இடங்களில், பாராளுமன்ற உறுப்பினர் உள்ளூர் தொகுதி மேம்பாட்டு திட்டம் 2012–13–ன்கீழ், ரூ.10.00 இலட்சம் மதிப்பீட்டில் அமைக்கப்பட உள்ள சிறிய உயர் கோபுர மின்விளக்குகள் அமைக்கும் பணிக்காக 04.10.2012 மற்றும் 18.10.2012 ஆகிய தேதிகளில் கோரப்பட்ட ஒப்பந்தப்புள்ளி அறிவிப்புகளை தினமணி நாளிதழில் வெளியிட்ட வகையில் முறையே ரூ.4,320/– மற்றும் ரூ.5,227/– ஆகியவற்றை செலுத்த கேட்டு பட்டியல்கள் பெறப்பட்டுள்ளன. எனவே மேற்படி தொகைகளை சம்மந்தப்பட்ட அலுவலகத்திற்கு செலுத்த மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அ.குறிப்பு</u>**: மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்.2924/2012/இ1)

**தீர்மானம் எண்.420. அலுவலக குறிப்பு ஏற்று கொள்ள ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 7**

இந்நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் ஒருங்கிணைந்த நகர்ப்புற வளர்ச்சி குழுமம் 2012–13–ன்கீழ், ரூ.372.00 இலட்சம் மதிப்பீட்டில் பணிகள் மேற்கொள்வதற்கு இந்நகர்மன்றம் தனது தீர்மானம் எண்.390 நாள் 28.09.2012–ன் மூலம் ஏற்கெனவே ஒப்புதல் அளித்துள்ளது. அதன் அடிப்படையில் ரூ.150.00 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படவுள்ள குடிநீர் வினியோக பணிகளில் ரூ.75.00 இலட்சம் மதிப்பீட்டிலான வ.எண்.1–க்கான பணியானது தொழில் நுட்ப

அனுமதி பெறுவதற்கு ஏதுவாக கீழ்காணும் விவரப்படி இரண்டாக பிரித்து மதிப்பீடு தயாரிக்கவும், ஒப்பந்தப்புள்ளி கோரவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

| வ.எண். | பணியின் பெயர் | மதிப்பீட்டு தொகை (ரூ. இலட்சத்தில்) |
|---|---|---|
| 1 | இந்நகராட்சி குடிநீர் வினியோகப் பணிகளுக்கு தேவையான 200 கிலோ வாட்ஸ் மற்றும் 45 கிலோ வாட்ஸ் மின்சக்தி கொண்ட ஜெனரேட்டர்கள் வினியோகம் செய்தல் மற்றும் இது தொடர்பான இதரப் பணிகள் மேற்கொள்ளுதல். | 50.00 |
| 2 | ஜெனரேட்டருக்கான அறை கட்டுதல் மற்றும் மேல்நிலை நீர்த்தேக்க தொட்டிகளுக்கு சுற்றுச்சுவர் கட்டுதல். | 25.00 |
| | **மொத்தம்** | **75.00** |

**அ.குறிப்பு :** பணியின் அவசர அவசியம் கருதி இந்நகர்மன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி நகர்மன்றத் தலைவரின் முன் அனுமதி பெற்று மதிப்பீடு தயார் செய்து ஒப்பந்தப்புள்ளி கோரியதை மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண். 1250/2012/இ1)

**தீர்மானம் எண்.421. அலுவலக குறிப்பு ஏற்று கொள்ள ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 8**

இந்நகராட்சியில் பாராளுமன்ற உறுப்பினர் உள்ளூர் தொகுதி மேம்பாட்டு திட்டம் 2012–13–ன்கீழ், மேற்கொள்ளப்பட உள்ள சிறிய உயர் கோபுர மின்விளக்கு அமைக்கும் பணிக்காக 18.10.2012–ல் கோரப்பட்ட ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பை மாலை மலர் நாளிதழில் வெளியிட்ட வகையில் ரூ.1,056/– ஐ செலுத்த கேட்டு பட்டியல் பெறப்பட்டுள்ளது. எனவே மேற்படி தொகையினை சம்மந்தப்பட்ட அலுவலகத்திற்கு செலுத்த மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு**: மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண். 2924/2012/இ1)

**தீர்மானம் எண்.422. அலுவலக குறிப்பு ஏற்று கொள்ள ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 9**

இந்நகராட்சி பொது சுகாதாரப் பிரிவிற்கு தேவையான பிளீச்சிங் பவுடர் 1500 கிலோ, பினாயில் (கறுப்பு) 500 லிட்டர், சுண்ணாம்புத்தூள் 4000 கிலோ ஆகிய பொருட்கள் ரூ.1,00,000/– செலவினத்திற்குள் வாங்கி கொள்வதற்கு நகர்மன்ற தலைவர் அவர்களின் 09.10.2012–ம் தேதிய முன்அனுமதியின்படி ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டமைக்கு நகர்மன்ற தீர்மானம் எண்.397 நாள் 25.10.2012–ல் அனுமதி அளித்துள்ளது. மேற்கண்ட பொருட்கள் வினியோகம் செய்ய 25.10.2012–ல் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டது. அதன் விவரம் பின்வருமாறு :

| வ.எண். | நிறுவனத்தின் பெயர் | பிளீச்சிங் பவுடர் கிலோ 1–க்கு ரூ. | பினாயில் லிட்டர் 1–க்கு ரூ. | சுண்ணாம்புத்தூள் கிலோ 1–க்கு ரூ. |
|---|---|---|---|---|
| 1 | கே.கே.இன்ஸ்டியூட் தாழக்குடி | **28.50** | **49.00** | **7.80** |
| 2 | எம்.எஸ்.சண்முகாகெமிக்கல்ஸ், நாகர்கோவில். | **30.00** | **52.00** | **8.50** |

மேற்காணும் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள கே.கே.இன்ஸ்டியூட், தாழக்குடி என்பவருக்கு வினியோக உத்தரவு வழங்குவதற்கும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு:** குறைவாக ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள கே.கே.இன்ஸ்டியூட், தாழக்குடி நிறுவனத்திற்கு வினியோகம் உத்தரவு வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.1388/2009/எச்1)

**தீர்மானம் எண்.423. அலுவலக குறிப்பு ஏற்று கொள்ள ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 10**

இந்நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் டெங்கு காய்ச்சல் தடுப்பு முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் மேற்கொள்ளும் பணிக்கு நகர்மன்ற தீர்மானம் எண். 267 நாள் 31.05.2012—ல் உத்தேச செலவினம் ரூ.5,00,000/— (ரூபாய் ஐந்து இலட்சம் மட்டும்) க்கு மூன்று மாதங்களுக்கு பணி செய்ய தீர்மானிக்கப்பட்டுள்ளது. நீர்நிலைகளில் வளர்ந்துள்ள செடிகொடிகளை அகற்றவும், கழிவுநீர் ஓடைகளை சுத்தம் செய்திடவும், வார்டு ஒன்றுக்கு ஒரு நபர் வீதம் தினக்கூலி அடிப்படையில் 24 பணியாளர்கள் வைத்து பணிபுரிய நகர்மன்ற தலைவர் அவர்களால் 16.05.2012—ல் முன் அனுமதி பெற்று பணி அவசர அவசியம் கருதி உள்ளூர் விலைப்புள்ளி மூலம் 14 பணியாளர்களை பணிக்கு பயன்படுத்த 17.05.2012—ல் நகர்மன்ற தலைவர் அவர்களின் முன்அனுமதி பெற்று பணி உத்தரவு வழங்கியமைக்கும், இந்நகர்மன்ற தீர்மானம் எண்.355 நாள் 31.08.2012—ல் ஒப்புதல் அளித்துள்ளது.

மேற்படி பணிக்கு 24 பணியாளர்கள் கிடைக்காத நிலையில் 14 பணியாளர்கள் மூலம் மே, ஜுன், ஜுலை (மே மாதத்தில் 7 நாட்கள் மட்டும்) 2012—ல் டெங்கு தடுப்பு பணிகள் செய்யப்பட்டு அதற்கான ஊதியம் ரூ.2,27,150/— வழங்கப்பட்டுள்ளது. பின்னர் அன்றைய தேவைக்கேற்ப 14 நபர்களில் இருந்து 7 நபர்களாக குறைக்கப்பட்டு ஆகஸ்ட், செப்டம்பர் மாதத்தில் பணிபுரிந்தமைக்கான ஊதியம் ரூ.1,05,600/— வழங்கப்பட்டுள்ளது.

டெங்கு காய்ச்சல் நோய் தடுப்பு பணிகளின் முக்கியத்துவம் மற்றும் அவசர அவசியம் கருதி 24 பணியாளர்கள் தீர்மானித்துள்ள நிலையில் போதிய பணியாளர்கள் கிடைக்காத நிலையில் குறைவான பணியாளர்கள் மூலம் பணிகள் மேற்கொள்ளப்பட்டு மூன்று மாத காலத்திற்கு அதிகமாக பணிபுரியப்பட்டுள்ளது. ஆனால் உத்தேச செலவினம் ரூ.5,00,000/—க்கு மிகாமல் உள்ளது. எனவே சூழ்நிலையைக் கருதியும், டெங்கு காய்ச்சல் நோய் தடுப்பின் முக்கியத்துவம் கருதியும், தீர்மானித்துள்ள காலத்திற்கு மேலாகியும் உத்தேச செலவினம் தீர்மானித்துள்ள ரூ.5,00,000/— க்கு மிகாமலும் பணிபுரிந்தமைக்கும், இனிவரும் காலங்களில் டெங்கு காய்ச்சல் நோய் தடுப்பு பணிகள் முக்கியத்துவம் கருதி ரூ.5,00,000/— வரையிலான தொகைக்கு தேவையான பணியாளர்கள் மூலம் அவ்வப்போதைய தேவைக்கேற்ப பணியாளர்களை கொண்டு பணிகளை மேற்கொண்டு அதற்கான ஊதியம் வழங்கவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு**: மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்.1982/2012/எச்1)

**தீர்மானம் எண்.424. அலுவலக குறிப்பு ஏற்று கொள்ள ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 11**

நகராட்சி நிர்வாக ஆணையர். சென்னை, அவர்களின் மின்னஞ்சல், நாள் **20.06.2012—**ன் படி, பொன்விழா ஆண்டு நகர்ப்புற வேலை வாய்ப்புத் திட்டம் (SJSRY) **2012—13** ம் ஆண்டிற்கு கீழ்கண்ட விபரப்படி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

| வரிசை எண் | பிரிவுகள் | தொகை (ரூபாயில்) |
|---|---|---|
| 1 | USEP — சுய வேலை வார்ப்புத் திட்டம் — தனி நபர் கடன் மானியம் | **2,47,476.00** |

| | | |
|---|---|---|
| 2 | UWEP – மகளிர் சுய உதவிக்குழு – குழுக் கடன் மானியம் | 1,85,606.00 |
| 3 | USEP - மகளிர் சுய உதவிக்குழு – சுழல் நிதி – RF | 61,869.00 |
| 4 | STEP UP –பயிற்சி வேலை மேம்பாட்டிற்கான திறன் வளர்ச்சி | 4,94,950.00 |
| 5 | UWEP – கூலி வேலை வாய்ப்பு | 1,92,129.00 |
| 6 | UCDN - சமுதாய மேம்பாட்டுக் கூட்டமைப்பு | 1,23,737.00 |
| | மொத்தம் | 13,05,767.00 |

மேற்கண்ட விபரம் மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

அ.குறிப்பு: 1. மன்றம் பதிவு செய்யலாம்.
2. பொன்விழா ஆண்டு நகர்ப்புற வேலைவாய்ப்புத் திட்டம் நெறிமுறைகளின்படி மேற்கண்ட அலகுகளுக்கான செலவீனங்கள் மேற்கொள்வதற்கு மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க. எண்: 2962/2012/CO)

**தீர்மானம் எண்.425. அலுவலக குறிப்பு ஏற்று கொண்டு பதிவு செய்யப்பட்டது. ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

(ஒம்) அ.நசீர்,
நகர்மன்றத் தலைவர்
குளச்சல் நகராட்சி

(உண்மை நகல்)

ஆணையர்(பொ)
குளச்சல் நகராட்சி

# குளச்சல் நகராட்சி

குளச்சல் நகராட்சி மன்றத்தின் சாதாரணக்கூட்டம் 2012 நவம்பர் திங்கள் 30.11.2012–ம் நாள் வெள்ளிக்கிழமை முற்பகல் 11.00 மணிக்கு நகர்மன்ற கூட்ட அரங்கில் வைத்து நடைபெற்றது.

முன்னிலை:
நகர்மன்ற தலைவர்
குளச்சல் நகர்மன்றம்.

**பொருள் எண். 1**

இந்நகராட்சியில் மாநில நிதிக்குழு பரிந்துரைகள் நிதி **2012–13**, உட்கட்டமைப்பு மற்றும் இயக்குதலும் பேணுதலும் இடைநிரப்புதல் நிதியின்கீழ் வறட்சி நிவாரணப் பணிகள் மேற்கொள்வதற்கு வெள்ளிப்பிள்ளையார் கோவில் சம்ப் அருகில், KSSSகாலனி மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அருகில், பண்டாரவிளை சார்பதிவாளர் அலுவலகம் அருகில் ஆகிய மூன்று இடங்களில் புதிதாக ஆழ்துளை கிணறுகள் அமைப்பதற்கு **31.10.2012** அன்று ஒப்பந்தப்புள்ளி கோரியதில் கீழ்க்கண்ட ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டுள்ளன. அவை பின்வருமாறு :

| | | |
|---|---|---|
| 1. | திரு.C.சந்திரசேகர்,<br>ஒப்பந்தத்தாரர் | மதிப்பீட்டை விட **0.07%** குறைவு. |
| 2. | திரு.பி. தங்கமணி<br>ஒப்பந்தத்தாரர் | மதிப்பீட்டை விட **1.74%** அதிகம். |

மேற்படி இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டைவிட **0.07%** குறைவாக ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள திரு.C.சந்திரசேகர், ஒப்பந்தத்தாரரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்று பணி உத்தரவு வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அ.குறிப்பு</u>**: **1)** மேற்படி பணிக்கு மதிப்பீட்டு தொகை ரூ. **6.00** இலட்சத்தில் திட்ட நிதி ஒதுக்கீடு தொகை ரூ.**3.00** லட்சம் போக, மீதி தொகை ரூ.**3.00** லட்சத்திற்கு இந்நகராட்சி பொதுநிதியிலிருந்து பணி மேற்கொள்ள நகர்மன்ற தீர்மானம் எண்.**393** நாள் **03.10.2012** அன்று ஒப்புதல் வழங்கியுள்ளது..

**2)** மேற்படி பணிக்கு மதிப்பீட்டை விட **0.07%** குறைவாக ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள திரு.C.சந்திரசேகர், ஒப்பந்தத்தாரரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்று பணி உத்தரவு வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.3881/2012/இ1)

**தீர்மானம் எண்.426. அலுவலக குறிப்பு ஏற்று கொள்ள ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 2**

இந்நகராட்சியில் பாராளுமன்ற உறுப்பினர் உள்ளூர் தொகுதி மேம்பாட்டு திட்டம் **2012–13**–ன்கீழ் ரு. **2.00** இலட்சம் மதிப்பீட்டில் கொட்டில்பாடு ஆர்.சி. ஆலயம் அருகிலுள்ள பேருந்து நிறுத்தத்தில் பயணிகள் நிழலகம் அமைப்பதற்கு இந்நகர்மன்றம் தனது தீர்மானம் எண்.**376** நாள் **28.09.2012**–ன்மூலம் ஏற்கனவே ஒப்புதல் அளித்துள்ளது. பணியின் அவசர அவசியம் கருதி நகர்மன்ற தலைவரின் முன்அனுமதி பெற்று **18.10.2012** அன்று ஒப்பந்தப்புள்ளி கோரியதில் கீழ்க்கண்ட ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டுள்ளன. அவை பின்வருமாறு : :

| | | |
|---|---|---|
| 1. | திரு.C.செல்லநாடார்<br>ஒப்பந்தத்தாரர் | மதிப்பீட்டை விட **1.64%** அதிகம் |
| 2. | திரு.எஸ்.ஜாண்றோஸ்<br>ஒப்பந்தத்தாரர் | மதிப்பீட்டை விட **0.01%** குறைவு. |

மேற்படி இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டைவிட 0.01% குறைவாக ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள திரு.S.ஜாண்றோஸ், ஒப்பந்தத்தாரரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்று பணி உத்தரவு வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு :** 1) மேற்படி பணிக்கு நகர்மன்ற தலைவரின் முன்அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரியதை மன்றம் அனுமதிக்கலாம்.

2) மதிப்பீட்டை விட 0.01% குறைவாக ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள திரு.எஸ்.ஜாண்றோஸ், ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்று பணி உத்தரவு வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.2924/2012/இ1)

**தீர்மானம் எண்.427. அலுவலக குறிப்பு ஏற்று கொள்ள ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 3**

பாராளுமன்ற உறுப்பினர் உள்ளூர் தொகுதி மேம்பாட்டு திட்டம் 2012–13–ன்கீழ் ரூ.10.00 இலட்சம் மதிப்பீட்டில் இந்நகராட்சிக்குட்பட்ட அண்ணாசிலை ஜங்சன், காந்தி ஜங்சன், பீச் ஜங்சன் மற்றும் பெரியப்பள்ளி வாசல் ஜங்சன் ஆகிய பகுதிகளில் மினி உயர்கோபுர மின்விளக்குகள் அமைப்பதற்கு இந்நகர்மன்றம் தனது தீர்மானம் எண்.376 நாள் 28.09.2012–ன் மூலம் ஏற்கனவே ஒப்புதல் அளித்துள்ளது. பணியின் அவசர அவசியம் கருதி நகர்மன்ற தலைவரின் முன்அனுமதி பெற்று 18.10.2012 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரியதில் கீழ்க்கண்ட ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டுள்ளன. அவை பின்வருமாறு :

| | | |
|---|---|---|
| 1. | M/s.Insta power limited,<br>3/19.Panchashila Park<br>New Delhi. | மதிப்பீட்டை விட 14.00% குறைவு<br>(ரூ.8,60,000/– ) |
| 2. | Malani Lighting Company,<br>No.11 East Car Street,<br>Tirunelveli. 627006 | மதிப்பீட்டை விட 13.00% குறைவு.<br>(ரூ.8,70,000/–) |
| 3. | Akash Eng.Associates (P) Ltd.<br>No.16, North Wall Road,<br>Kondithope, Chennai. | மதிப்பீட்டை விட 10.68% குறைவு.<br>(ரூ.8,93,200/–) |
| 4. | Teronic Instruments<br>Post Box No.3746<br>9 Athipattan Street, Mount Road,<br>Chennai. | மதிப்பீட்டை விட 2.44% குறைவு.<br>(ரூ.9,75,600/–) |
| 5. | Deepam Eng. Company,<br>Nagappa Muthali Street<br>Pudupet, Chennai. | மதிப்பீட்டை விட 0.004% குறைவு.<br>(ரூ.9,99,960/–) |

மேற்படி ஐந்து ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டைவிட 14.00% குறைவாக ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள M/s.Insta power limited, New Delhi நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்று பணி உத்தரவு வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு** : 1) மேற்படி பணிக்கு நகர்மன்ற தலைவரின் முன்அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரியதை மன்றம் அனுமதிக்கலாம்.

2) மதிப்பீட்டை விட 14.00% குறைவாக ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள M/s.Insta Power limited, New Delhi நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்று பணி உத்தரவு வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.2924/2012/இ1)

**தீர்மானம் எண்.428. அலுவலக குறிப்பு ஏற்று கொள்ள ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 4**

இந்நகராட்சிக்குட்பட்ட முக்கிய சாலைகளில் சீராக ஒளிரும் வழிகாட்டும் சாலைக் குறியீடுகள் ரூ.1.20 இலட்சம் மதிப்பீட்டில் அமைப்பதற்கு இந்நகர்மன்றம் தனது தீர்மானம் எண்.357 நாள் 31.08.2012 –ன்மூலம் ஏற்கனவே ஒப்புதல் அளித்துள்ளது. அதன் அடிப்படையில்

30.10.2012–ல் மறுஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. அதில் கீழ்க்கண்ட ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டுள்ளன. அவை பின்வருமாறு :

| | | |
|---|---|---|
| 1. | திரு.T.ஜாண் ரெக்ஸ்லின் ஜோஸ், ஒப்பந்தத்தாரர் | மதிப்பீட்டை விட 1.47% அதிகம் |
| 2. | திரு.சி.தேவராஜ் ஒப்பந்தத்தாரர் | மதிப்பீட்டை விட 0.12% குறைவு. |

மேற்படி இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டைவிட 0.12% குறைவாக ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள திரு.சி.தேவராஜ், ஒப்பந்தத்தாரரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்று பணி உத்தரவு வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு :** மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.231/2012/இ1)

**தீர்மானம் எண்.429. அலுவலக குறிப்பு ஏற்று கொள்ள ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 5**

இந்நகராட்சி பொதுசுகாதாரப் பிரிவு மினிலாறி TN -74 T.5508–ன் நான்கு டயர்களும் தேய்வு ஏற்பட்டுள்ளது. சரி செய்வதற்கான உத்தேசச் செலவுத் தொகை ரூ.16,000/–க்கு இந்நகர்மன்றம் தனது தீர்மானம் எண்.312 நாள் 31.07.2012–ன் மூலம் ஒப்புதல் வழங்கியுள்ளது. அதன் அடிப்படையில் 30.10.2012–ல் ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் கீழ்காணும் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டுள்ளது.

| | | |
|---|---|---|
| 1. | கே.எஸ்.எஸ்.எஸ்.ஆட்டோமொபைல்ஸ் ஆசாரிப்பள்ளம் ரோடு, நாகர்கோவில் | 0.25% மதிப்பீட்டை விட குறைவு. (ரூ.15,960/– ) |
| 2. | மணி மோட்டார் ஒர்க்ஸ், ஒழுகினசேரி, நாகர்கோவில். | 0.62% மதிப்பீட்டை விட குறைவு. (ரூ.15,900/–) |

மேற்படி பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டைவிட 0.62% குறைவாக ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள மணி மோட்டார் ஒர்க்ஸ், ஒழுகினசேரி, நாகர்கோவில் நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியை அங்கீகரித்து பணி உத்தரவு வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு**: மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்.2913/2009/எச்1)

**தீர்மானம் எண்.430. அலுவலக குறிப்பு ஏற்று கொள்ள ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 6**

குளச்சல் நகராட்சி பொது சுகாதாரப் பிரிவு துப்புரவு பணியாளர்கள் தற்போது 45 நபர்களில் 22 பணியாளர்கள், குடிநீர் வழங்குதல், தெருவிளக்கு பராமரித்தல், இரவுக் காவலர்பணி மற்றும் அலுவலக எழுத்தர் பணி, ஓட்டுநர், வசூல் பணி ஆகிய நகராட்சி பணிகளுக்கு பயன்படுத்தப்பட்டு வருகின்றனர். மீதமுள்ள 23 நிரந்தர துப்புரவு பணியாளர்களுடன் துப்புரவு பணியாளர் காலியிடம் 5 எண்ணிக்கைக்கு மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் ஊதிய நிர்ணயத் தொகையின்படி மன்ற அனுமதி பெற்று 7 துப்புரவு பணியாளர்கள் ஒப்பந்த அடிப்படையிலும், டெங்கு காய்ச்சல் தடுப்பு பணிக்கு தற்போதைய நிலையில் 7 துப்புரவு பணியாளர்களும் பணிபுரிந்து வருகின்றனர். மொத்த பணியாளர் தோற்றுவிப்பு 50 எண்ணிக்கை இடங்களில் தற்போதைய நிலையில் நிரந்தர துப்புரவு பணியாளர் 23, ஓய்வுக்கான ஒப்பந்த பணியாளர்கள் 7 மற்றும் டெங்கு நோய் தடுப்பு ஒப்பந்த பணியாளர்கள் 7 பேர் உட்பட மொத்தம் 37 பணியாளர்கள் மட்டுமே துப்புரவு பணிக்கு பயன்படுத்தப்பட்டு வருகின்றனர். இந்நிலையில் துப்புரவு பணியாளர்கள் விடுப்பு மற்றும் முன் அனுமதியின்றி வருகை தராமை போன்ற காரணங்களால் சராசரியாக 5 – 6 நபர்கள் கழித்து 31 அல்லது 32 பணியாளர்களே பணிக்கு பயன்படுத்தப்பட்டு வரும் நிலை உள்ளது. இப்பணியாளர்கள் மூலம் அன்றாட துப்புரவு பணிகளையே பிரதானமாக செயல்படுத்தும் நிலையுடன் அவசர அவசியம் மற்றும் பொது சுகாதார நலனைப் பாதிக்கக் கூடிய பணிகளையும் செயல்படுத்தப்பட்டு மேலாண்மை பணிகள் மற்றும் கழிவுநீர் கால்வாய் சுத்தம் செய்யும் பணிகளை முழுமையாக செயல்படுத்த முடியாத நிலை ஏற்படுகிறது. தற்போது கன்னியாகுமரி மற்றும் அண்டை மாவட்டங்களில் டெங்கு

காய்ச்சல் பரவலாக உள்ளதாலும், வடகிழக்கு பருவமழை தொடங்கி விட்ட நிலையாலும், டெங்கு காய்ச்சல் தடுப்பு முன்னெச்சரிக்கை பணிகள் மற்றும் கழிவுநீர் கால்வாய்கள் சுத்தம் செய்யும் நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டியுள்ளது. இது குறித்து நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை, நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், திருநெல்வேலி மற்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் ஆகியோர்களால் ஆலோசனைக் கூட்டம் மற்றும் சுற்றறிக்கைகள் வாயிலாக அறிவுறுத்தப்பட்டுள்ளது.

புகை மருந்து அடித்தல் (ஆறு நாட்களுக்கு ஒருமுறை) அபேட் கரைசல் ஊற்றுதல், கழிவுநீர் கால்வாய்கள் சுத்தம் செய்தல் மற்றும் இதர டெங்கு நோய் தடுப்பு பணிகள் மேற்கொள்ளுதல் ஆகிய அவசரப் பணிகள் மேற்கொள்ள வேண்டிய நிலை கருதி, மாவட்ட நிர்வாகம் நிர்ணயித்துள்ள ஊதியப்படி நாள் ஒன்றிற்கு ஒரு நபருக்கு ரூ.275/– வீதம் 12 துப்புரவு பணியாளர்கள் தனியார் ஒப்பந்த அடிப்படையில் மூன்று மாத காலத்திற்கு பணிக்கு அமர்த்தும் பொருட்டு குறுகிய கால ஒப்பந்தப்புள்ளிகள் கோர 22.10.2012–ல் நகர்மன்ற தலைவர் அவர்களின் முன்அனுமதி பெற்றுள்ளதன் அடிப்படையில் 09.11.2012–ல் ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் கீழ்காணும் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டுள்ளன.

| | | |
|---|---|---|
| 1. | திரு.T.ஜாண் ரெக்ஸ்லின் ஜோஸ், ஒப்பந்தத்தாரர் | ஒரு நபருக்கு நாள் ஒன்றிற்கான கூலி ரூ. 275/– |
| 2. | திரு.சி.தேவகரின்சாம் ஒப்பந்தத்தாரர் | ஒரு நபருக்கு நாள் ஒன்றிற்கான கூலி ரூ. 300/– |

மேற்காணும் இரண்டு ஒப்பந்தப்புள்ளியில் குறைவான ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள திரு.T.ஜாண் ரெக்ஸ்லின் ஜோஸ் என்பவரின் ஒப்பந்தப்புள்ளியை டெங்கு நோய் தடுப்பு முன்னெச்சரிக்கை பணிகளின் அவசியம் கருதி மன்றம் அங்கீகரிக்கலாம்.

<u>**அ.குறிப்பு**</u>: : டெங்கு காய்ச்சல் தடுப்பு முன்னெச்சரிக்கை பணியின் அவசரம் மற்றும் பொது சுகாதார நலன் காக்கும் அத்தியாவசியம் கருதி உத்தேச செலவினம் ரூ.3,00,000/–க்கு நகர்மன்ற தலைவர் அவர்களின் முன்அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொண்டமைக்கும், குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள திரு.T.ஜாண் ரெக்ஸ்லின் ஜோஸ் என்பவரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்று அங்கீகரித்து மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.4088/2012/எச்1)

**தீர்மானம் எண்.431. அலுவலக குறிப்பு ஏற்று கொள்ள ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 7**

இந்நகராட்சி பொதுசுகாதாரப் பிரிவு மினிலாறி TN -74 Z-2339–ன் தகுதிச்சான்று புதுப்பிப்பதற்கு பழுதுகளை சரி செய்ய உத்தேச செலவுத் தொகை ரூ.26,000/–க்கு நகர்மன்றம் தனது தீர்மானம் எண்.352 நாள் 31.08.2012–ன் மூலம் ஒப்புதல் வழங்கியுள்ளது. அதன் அடிப்படையில் 30.10.2012–ல் ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் கீழ்க்காணும் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டுள்ளது.

| | | |
|---|---|---|
| 1. | கே.எஸ்.எஸ்.எஸ்.ஆட்டோமொபைல்ஸ் ஆசாரிப்பள்ளம் ரோடு, நாகர்கோவில் | 0.38% மதிப்பீட்டை விட குறைவு. (ரூ. 25,900/– ) |
| 2. | மணி மோட்டார் ஒர்க்ஸ், ஒழுகினசேரி, நாகர்கோவில். | 1.35% மதிப்பீட்டை விட குறைவு. (ரூ.25,650/–) |

மேற்படி பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டைவிட 1.35% குறைவாக ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள மணி மோட்டார் ஒர்க்ஸ், ஒழுகினசேரி, நாகர்கோவில் நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியை அங்கீகரித்து பணி உத்தரவு வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

<u>**அ.குறிப்பு**</u>: மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்.4008/2010/எச்1)

**தீர்மானம் எண்.432. அலுவலக குறிப்பு ஏற்று கொள்ள ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 8**

இந்நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் டெங்கு காய்ச்சல் தடுப்பு நடவடிக்கை மேற்கொள்ள கொசு ஒழிப்பு புகை மருந்து அடிக்கும் இயந்திரம் போதிய அளவில் இருப்பில் இல்லாததால், கொசு ஒழிப்பு பணியின் அவசர அவசியம் மற்றும் பொது சுகாதார முக்கியத்துவம் கருதி, நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் அவர்களின் கடிதம் ந.க.எண்.3870/2010/அ4 நாள் 11.10.2012–ல் தெரிவித்துள்ளவாறு நகராட்சி சட்டம் பிரிவு 15–ன்கீழ், நகராட்சி ஆணையாளர் (பொ) அவர்களின் உத்திரவின்டி, மூன்று வெளி புகை மருந்து அடிக்கும் இயந்திரம் மற்றும் வீட்டினுள் புகை மருந்து அடிக்கும் இயந்திரம் மூன்று மற்றும் அதற்கான புகை உருளை வாங்கப்பட்டு தொகை வழங்கப்பட்டமைக்கும் மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

**அ.குறிப்பு**: மன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்.

(ந.க.எண்.3702/2009/எச்1)

**தீர்மானம் எண்.433. அலுவலக குறிப்பு ஏற்று கொள்ள ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 9**

குளச்சல் நகராட்சி கடற்கரை பகுதி என்பதாலும், வடகிழக்குப் பருவமழை தொடங்கியுள்ளதாலும், மழை நேரங்களில் டெங்கு நோய் தடுப்பு பணிகள் மற்றும் துப்புரவு பணிகள் மேற்கொள்ள வேண்டிய அத்தியாவசியம் மற்றும் பொது சுகாதார நலன் கருதி துப்புரவு பணியாளர்கள் 45 பேருக்கு (ஆண்கள் 28, பெண்கள் 17) துப்புரவுப்பணி மேற்பார்வையாளர்கள் 4 பேருக்கு மழை பாதுகாப்பு உடைகள் (Rain Coat) அரசு அங்கீகரிக்கப்பட்ட நிறுவனங்கள் / தனியார் கடைகளிலிருந்து வாங்கி வழங்க ஆகும் உத்தேச செலவுத் தொகை ரூ.27,000/–க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு**: மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்.2881/2012/எச்1)

**தீர்மானம் எண்.434. அலுவலக குறிப்பு ஏற்று கொள்ள ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 10**

இந்நகராட்சிக்குட்பட்ட 24 வார்டுகளிலும் மற்றும் நகரின் முக்கிய இடங்களில் டெங்கு காய்ச்சல் தடுப்பு முன்னெச்சரிக்கை குறித்த விழிப்புணர்வு விளம்பர தட்டிகள் அமைப்பதற்கு ஆணையர் அவர்களின் உத்தரவின்படி, உள்ளூர் விலைப்புள்ளி பெற்று நகராட்சி சட்டம் பிரிவு 15–ன்கீழ் அவசர அவசியம் கருதி விளம்பரத் தட்டிகள் 3x 4 =12 சதுர அடி அளவு, பிரிண்டிங் கூலி, மர ரீப்பர் செலவு மற்றும் வேலை கூலி (ஆசாரி வேலை ) உட்பட விளம்பர தட்டி ஒன்றிற்கு ரூ.172/– வீதம் மொத்தம் 206 விளம்பர தட்டிகளுக்கு மொத்த ரூ.35,432/– செலவினத்தில் குறைவான விலைப்புள்ளி அளித்துள்ள S.A.Digital, திங்கள்நகர் நிறுவனத்திற்கு பணி உத்தரவு வழங்கி தொகை வழங்கப்பட்டமைக்கும் மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

**அ.குறிப்பு**: மன்றம் பார்வையிட்டு அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்.349/2009/எச்1)

**தீர்மானம் எண்.435. அலுவலக குறிப்பு ஏற்று கொள்ள ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 11**

நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண்.35277/2011/இ3 நாள் 11.06.2012, 19.06.2012, 23.06.2012 மற்றும் 27.08.2012–ன்படி இந்நகராட்சிக்குட்பட்ட அங்கன்வாடி மையங்களில் குடிநீர் வசதி, மின்வசதி, குழந்தைகள் எளிதாக பயன்படுத்தும் வகையில் கழிவறை வசதி ஆகியவை செயல்படுத்த அறிவுரை வழங்கப்பட்டதன்படி கீழ்கண்ட 10 அங்கன்வாடி மையங்களில் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ள மொத்த மதிப்பீடு தொகை ரூ.12,00,000/– க்கு தயாரிக்கப்பட்டது. குழந்தைகளின் நலன் கருதியும், பணியின் அவசர அவசியம் கருதியும் பராமரிப்பு பணிகளை விரைவாக முடித்திட கீழ்க்கண்டபடி மூன்று தொகுப்பாக மதிப்பீடு முறையே ரூ.4,00,000/– செலவில் தயார் செய்து நகர்மன்ற தலைவரின் முன்அனுமதி பெற்று 18.10.2012 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரியதை மன்றத்தின் பார்வைக்கு சமர்ப்பிக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| I | (1) | சாஸ்தாங்கரை மையம் எண். 79 | மதிப்பீடு தொகை<br>ரூ.4,00,000/– |
| | (2) | செக்காலத்தெரு மையம் எண்.80 | |
| | (3) | அஞ்சாலிவிளை மையம் எண். 81 | |
| | (4) | மரமடி–1 மையம் எண். 84 | |
| II | (1) | கொட்டில்பாடு–1 மையம் எண். 83 | ரூ.4,00,000/– |
| | (2) | கொட்டில்பாடு–2 மையம் எண். 88 | |
| | (3) | மரமடி–2 மையம் எண். 87 | |
| III | (1) | துறைமுகம்–1 மையம் எண். 85 | ரூ. 4,00,000/– |
| | (2) | துறைமுகம்–2 மையம் எண். 86 | |
| | (3) | களிமார் மையம் எண். 82 | |
| | | **மொத்தம்** | **ரூ. 12,00,000/–** |

**அ.குறிப்பு** – (1) மேற்படி அங்கன்வாடி பராமரிப்பிற்கு மதிப்பீடு தொகை ரூ.9,00,000/–க்கு நகர்மன்ற தீர்மானம் எண்.251 நாள் 31.05.2012–ன்படி தீர்மானம் நிறைவேற்றியதை ரத்து செய்யலாம்.

(2) மேற்படி பணிக்கு மதிப்பீட்டு தொகை ரூ.12,00,000/– ஐ மூன்று தொகுப்பாக பிரித்து நகர்மன்ற தலைவரின் முன்அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரியதை மன்றம் அங்கீகரிக்கலாம்.

**தீர்மானம் எண்.436. அலுவலக குறிப்பு ஏற்று கொள்ள ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது. 31.05.2012 தீர்மான எண்.251 ரத்து செய்யப்பட்டது.**

**பொருள் எண். 12**

இந்நகராட்சியில் பணிபுரிந்து வரும் துப்புரவு பணியாளர்கள் (ஆண் 27, பெண் 17), துப்புரவுப்பணி மேற்பார்வையாளர்கள் 4 பேர் மற்றும் தெருவிளக்கு பராம.ப்பு 2 பேர் ஆகியவர்களுக்கு 2012 ஆம் ஆண்டுக்கான சீருடைகள் கோ–ஆப்டெக்ஸ் – அரசு அங்கீகாரம் பெற்ற நிறுவனங்களிடமிருந்து அரசு விதிமுறைப்படி 2 இணைகள் சீருடைகள் வாங்கி வழங்கவும், அதற்கான தையற்கூலி வழங்கிடவும், மேலும் அரசு அங்கீகாரம் பெற்ற நிறுவனங்கள் / தனியார் நிறுவனங்களிலிருந்து ரூ. 140/–க்கு மிகாமல் 1 இணை காலனிகள் வாங்கி வழங்கவும், உத்தேச செலவினம் ரூ. 1,00,000/–க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு** : மன்றம் அனுமதி வழங்கலாம். (ந.க.எண்.3027/2010/எச்1)

**தீர்மானம் எண்.437. அலுவலக குறிப்பு ஏற்று கொள்ள ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 13**

டெங்கு காய்ச்சல் நோய் தடுப்பு முன்னெச்சரிக்கை பணியாக விழிப்புணர்வு ஏற்படுத்தும் பொருட்டு, அவசர அவசியம் கருதி ஆணையர் அவர்கள் உத்திரவின்படி பிரிவு 15–ன்கீழ் விழிப்புணர்வு துண்டு பிரசுரங்கள் 10,000 எண்ணிக்கை குளச்சல், செல்வி அச்சகத்தில் அச்சடித்து நகர்ப்பகுதி முழுவதும் வழங்கப்பட்டதற்கும், அதற்கான செலவினம் ரூ.5,250/–ஐ மேற்படி அச்சகத்திற்கு வழங்குவதற்கும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு** : அவசர அவசியம் கருதி பிரிவு 15–ன்கீழ் அச்சடித்தமைக்கும், செலவினம் வழங்கப்பட்டமைக்கும் மன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்.

(ந.க.எண்.349/2010/எச்1)

**தீர்மானம் எண்.438. அலுவலக குறிப்பு ஏற்று கொள்ள ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது. பார்வையிட்டு பதிவு செய்யப்பட்டது.**

**பொருள் எண். 14**

இந்நகராட்சியில் நடைபெற்று வரும் திட்டப்பணிகள் தொடர்பான லிளம்பரத்தை மாலை முரசு தொழில் மலரில் வெளியிட்ட வகையில் ரூ.6,500/–ஐ வழங்க கேட்டு பட்டியல் பெறப்பட்டுள்ளது. எனவே மேற்படி தொகையினை செலுத்துவதற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அ.குறிப்பு</u>**: மன்றம் அனுமதி வழங்கலாம். ( ந.க.எண்.2045/2012/இ1)

**தீர்மானம் எண்.439. அலுவலக குறிப்பு ஏற்று கொள்ள ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 15**

இந்நகராட்சிக்குட்பட்ட பொது இடங்களில் மாற்று திறனாளிகளுக்கு தடையில்லா சூழல் உருவாக்கும் பொருட்டு கழிப்பறைகள் கட்டுவதற்கு மதிப்பீடு தொகை ரூ. 10,00,000/– க்கு நகர்மன்ற தீர்மானம் எண்.358 நாள் 31.08.2012–ன்படி ஒப்புதல் வழங்கி உள்ளது. பணியை விரைந்து முடிப்பதற்கு ஏதுவாக தினசரிச்சந்தை மற்றும் பேருந்து நிலையம் ஆகியவற்றில் மேற்படி கழிப்பறைகள் கட்டுவதற்கு மதிப்பீடு தொகை ரூ.5,00,000/–க்கு 30.10.2012 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரியதில் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பட்டன. அவற்றின் ஒப்புநோக்கு பட்டியல் பின்வருமாறு :

| | | |
|---|---|---|
| 1. | திரு.சி. தேவராஜ் ஒப்பந்தத்தாரர் | மதிப்பீட்டை விட 0.02% குறைவு |
| 2. | திரு.T.ஜாண் ரெக்ஸ்லின் ஜோஸ், ஒப்பந்தத்தாரர் | மதிப்பீட்டை விட 0.76% அதிகம் |

மேற்படி இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டைவிட 0.02% குறைவாக ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள திரு.சி.தேவராஜ், ஒப்பந்தத்தாரரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்று பணி உத்தரவு வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

<u>**அ.குறிப்பு :**</u> மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.1098/2012/இ1)

**தீர்மானம் எண்.440. அலுவலக குறிப்பு ஏற்று கொள்ள ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 16**

இந்நகராட்சிக்குட்பட்ட பொது இடங்களில் மாற்று திறனாளிகளுக்கு தடையில்லா சூழல் உருவாக்கும் பொருட்டு கழிப்பறைகள் கட்டுவதற்கு மதிப்பீடு தொகை ரூ.10,00,000/– க்கு நகர்மன்ற தீர்மானம் எண்.358 நாள் 31.08.2012–ன்படி ஒப்புதல் வழங்கி உள்ளது. பணியை விரைந்து முடிப்பதற்கு ஏதுவாக நகராட்சி அலுவலகம் மற்றும் தீயணைப்பு துறை அலுவலகம் ஆகியவற்றில் மேற்படி கழிப்பறைகள் கட்டுவதற்கு மதிப்பீடு தொகை ரூ.5,00,000/–க்கு 30.10.2012 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரியதில் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பட்டன. அவற்றின் ஒப்புநோக்கு பட்டியல் பின்வருமாறு :

| | | |
|---|---|---|
| 1. | திரு.சி. தேவராஜ் ஒப்பந்தத்தாரர் | மதிப்பீட்டை விட 0.02% குறைவு |
| 2. | திரு.T.ஜாண் ரெக்ஸ்லின் ஜோஸ், ஒப்பந்தத்தாரர் | மதிப்பீட்டை விட 0.76% அதிகம். |

மேற்படி இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டைவிட 0.02% குறைவாக ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள திரு.சி.தேவராஜ், ஒப்பந்தத்தாரரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்று பணி உத்தரவு வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

<u>**அ.குறிப்பு :**</u> மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.1098/2012/இ1)

**தீர்மானம் எண்.441. அலுவலக குறிப்பு ஏற்று கொள்ள ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 17**

இந்நகராட்சிக்குட்பட்ட சாஸ்தாங்கரை, செக்காலத்தெரு, அஞ்சாலிவிளை மற்றும் மரமடி–1 ஆகிய அங்கன்வாடி மையங்களுக்கு பராமரிப்பு பணிகள் மேற்கொள்ள மதிப்பீட்டு தொகை ரூ.4,00,000/–க்கு 18.10.2012 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரியதில் கீழ்க்கண்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பட்டன. அவற்றின் ஒப்புநோக்கு பட்டியல் பின்வருமாறு :

| | | |
|---|---|---|
| 1. | திரு.சி. சந்திரசேகர், ஒப்பந்தத்தாரர் | மதிப்பீட்டை விட 0.02% குறைவு |
| 2. | திரு.P. தங்கமணி, ஒப்பந்தத்தாரர் | மதிப்பீட்டை விட 1. 26% அதிகம். |

மேற்படி இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டைவிட 0.02% குறைவாக ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள திரு.சி. சந்திரசேகர், ஒப்பந்தத்தாரரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்று பணி உத்தரவு வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அ.குறிப்பு :</u> 1)** பணிகளை விரைந்து முடிப்பதற்கு ஏதுவாக மேற்படி பணிகளுக்கு மூன்று தொகுப்பாக முறையே ரூ.4,00,000/– வீதம் ரூ.12,00,000/–க்கு நகர்மன்ற தலைவரின் முன்அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரியதை மன்றம் அங்கீகரிக்கலாம்.

2)மேற்படி தெரிவித்துள்ள அங்கன்வாடி மையங்களில் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ள பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டைவிட 0.02% குறைவாக ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள திரு.சி. சந்திரசேகர், ஒப்பந்தத்தாரரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்று பணி உத்தரவு வழங்க மன்ற அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.4029/2011/இ1)

**தீர்மானம் எண்.442. அலுவலக குறிப்பு ஏற்று கொள்ள ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 18**

இந்நகராட்சிக்குட்பட்ட கொட்டில்பாடு மையம் எண்.1 மற்றும் 2, மரமடி மையம் எண்.2 ஆகிய அங்கன்வாடி மையங்களுக்கு பராமரிப்பு பணிகள் மேற்கொள்ள மதிப்பீட்டு தொகை ரூ.4,00,000/–க்கு 30.10.2012 அன்று மறுஒப்பந்தப்புள்ளி கோரியதில் கீழ்க்கண்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பட்டன. அவற்றின் ஒப்புநோக்கு பட்டியல் பின்வருமாறு :

| | | |
|---|---|---|
| 1. | திரு.சி. தேவராஜ், ஒப்பந்தத்தாரர் | மதிப்பீட்டை விட 0.01% குறைவு |
| 2. | திரு.T.ஜாண் ரெக்ஸ்லின் ஜோஸ், ஒப்பந்தத்தாரர் | மதிப்பீட்டை விட 1.06% அதிகம். |

மேற்படி இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டைவிட 0.01% குறைவாக ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள திரு.சி. தேவராஜ், ஒப்பந்தத்தாரரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்று பணி உத்தரவு வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அ.குறிப்பு :</u> 1)** பணிகளை விரைந்து முடிப்பதற்கு ஏதுவாக மேற்படி பணிகளுக்கு மூன்று தொகுப்பாக முறையே ரூ.4,00,000/– வீதம் ரூ.12,00,000/–க்கு நகர்மன்ற தலைவரின் முன்அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரியதை மன்றம் அங்கீகரிக்கலாம்.

2) மேற்படி தெரிவித்துள்ள அங்கன்வாடி மையங்களில் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ள பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டைவிட 0.01% குறைவாக ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள திரு.சி. தேவராஜ், ஒப்பந்தத்தாரரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்று பணி உத்தரவு வழங்க மன்ற அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.4029/2011/இ1)

**தீர்மானம் எண்.443. அலுவலக குறிப்பு ஏற்று கொள்ள ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 19**

இந்நகராட்சிக்குட்பட்ட துறைமுகத்தெரு–1 மற்றும் 2, களிமார் ஆகிய அங்கன்வாடி மையங்களுக்கு பராமரிப்பு பணிகள் மேற்கொள்ள மதிப்பீட்டுத் தொகை ரூ.4,00,000/– க்கு 18.10.2012 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரியதில் கீழ்க்கண்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பட்டன. அவற்றின் ஒப்புநோக்கு பட்டியல் பின்வருமாறு :

| | | |
|---|---|---|
| 1. | திரு.எஸ். ஜாண்றோஸ், ஒப்பந்தத்தாரர் | மதிப்பீட்டை விட 0.05% குறைவு |
| 2. | திரு.C. செல்லநாடார், ஒப்பந்தத்தாரர் | மதிப்பீட்டை விட 1. 28% அதிகம். |

மேற்படி இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டைவிட 0.05% குறைவாக ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள திரு.எஸ். ஜாண்றோஸ், ஒப்பந்தத்தாரரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்று பணி உத்தரவு வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அ.குறிப்பு :</u>** 1) பணிகளை விரைந்து முடிப்பதற்கு ஏதுவாக மேற்படி பணிகளுக்கு மூன்று தொகுப்பாக முறையே ரூ.4,00,000/– வீதம் ரூ.12,00,000/–க்கு நகர்மன்ற தலைவரின் முன்அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரியதை மன்றம் அங்கீகரிக்கலாம்.

2) மேற்படி தெரிவித்துள்ள அங்கன்வாடி மையங்களில் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ள பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டைவிட 0.05% குறைவாக ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள திரு.எஸ். ஜாண்றோஸ், ஒப்பந்தத்தாரரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்று பணி உத்தரவு வழங்க மன்ற அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.4029/2011/இ1)

**தீர்மானம் எண்.444. அலுவலக குறிப்பு ஏற்று கொள்ள ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண்.20**

இந்நகராட்சியில் ஒருங்கிணைந்த நகர்ப்புற வளர்ச்சி குழுமம் 2012–2013 (IUDM) திட்டத்தின்கீழ் மேற்கொள்ளப்படவுள்ள பணிகளுக்கு இந்நகர்மன்றம் தனது தீர்மானம் எண்.390 நாள் 28.09.2012 –ன் மூலம் ஏற்கனவே ஒப்புதல் அளித்துள்ளது. அதனடிப்படையில் முதற்கட்டமாக சாலைகள் மற்றும் வடிகால் அமைக்கும் பணிகளுக்கு சிப்பம் முறையில் 31.10.2012 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளின் Technical Bids திறக்கப்பட்டு, அதன் பின்னர் தொழில் நுட்ப தகுதிவாய்ந்த ஒப்பந்தத்தாரர்கள் முன்னிலையில் 19.11.2012 அன்று Price Bid திறக்கப்பட்டது. அதன் ஒப்புநோக்கு பட்டியல் பின்வருமாறு :

| வ.எண். | ஒப்பந்தத்தாரர் பெயர் மற்றும் முகவரி | சிப்பம் எண். | ஒப்பந்த மதிப்பீட்டு தொகை ரூ. | ஒப்பந்தப்புள்ளி சதவிகிதம் |
|---|---|---|---|---|
| | **<u>சாலைகள்</u>** | | | |
| 1 | திரு.கே. கிருஷ்ணதாஸ் ஒப்பந்தத்தாரர் | I | 2450000 | மதிப்பீட்டை விட 0.01% குறைவு. (ரூ.2375220.10) |
| 2 | திருமதி.T. அம்பிகா ஒப்பந்தத்தாரர் | | | மதிப்பீட்டை விட 3.35% அதிகம். (ரூ.2454985/– ) |
| 3 | திரு.T.ஜாண்ரெக்ஸலின் ஜோஸ் ஒப்பந்தத்தாரர் | II | 2550000 | மதிப்பீட்டை விட 0.01% குறைவு. (ரூ.2506567.70 ) |
| 4 | திரு.C.தேவகரிம் சாம் ஒப்பந்தத்தாரர், | | | மதிப்பீட்டை விட 0,56% அதிகம். (ரூ.2520750/– ) |
| | **<u>வடிகால்கள்</u>** | | | |
| 5 | திருமதி.T. அம்பிகா ஒப்பந்தத்தாரர் | III | 2500000 | மதிப்பீட்டை விட 2.15% அதிகம். (ரூ.2455240/–) |
| 6 | திரு.கே. கிருஷ்ணதாஸ் ஒப்பந்தத்தாரர் | | | மதிப்பீட்டை விட 0.01% குறைவு. (ரூ.2403399.30) |

| | | | | |
|---|---|---|---|---|
| 7<br><br>8 | திரு.T.ஜாண்ரெக்ஸலின் ஜோஸ் ஒப்பந்தத்தாரர்<br><br>திரு.எ.விஷ்ணுராம், ஒப்பந்தத்தாரர் | IV | 2500000 | மதிப்பீட்டை விட 1.65% அதிகம். (ரூ.2468408/-)<br><br>மதிப்பீட்டை விட 0.05% குறைவு. (ரூ.2427123/–) |

மேற்படி ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டைவிட குறைவாக ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள ஒப்பந்தத்தாரர்களின் விவரம் கீழ்க்கண்டவாறு :

| வ.எண். | சிப்பம் எண் | மதிப்பீட்டைவிட குறைவாக ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள ஒப்பந்தத்தாரரின் பெயர் | ஒப்பந்தப்புள்ளி சதவிகிதம் |
|---|---|---|---|
| 1 | I | திரு.கே. கிருஷ்ணதாஸ் | மதிப்பீட்டை விட 0.01% குறைவு. (ரூ.2375220.10) |
| 2 | II | திரு.T.ஜாண்ரெக்ஸலின் ஜோஸ் | மதிப்பீட்டை விட 0.01% குறைவு. (ரூ.2506567.70 ) |
| 3 | III | திரு.கே. கிருஷ்ணதாஸ் | மதிப்பீட்டை விட 0.01% குறைவு. (ரூ.2403399.30) |
| 4 | IV | திரு.எ.விஷ்ணுராம், | மதிப்பீட்டை விட 0.05% குறைவு. (ரூ.2427123/–) |

மேற்காணும் ஒப்பந்தத்தாரர்களின் மதிப்பீட்டைவிட குறைந்த ஒப்பந்தப்புள்ளிகளை ஏற்று, சம்மந்தப்பட்ட ஒப்பந்தத்தாரர்களுக்கு Letter of Acceptance (L.A.O.) வழங்குவதற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு :** குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள ஒப்பந்தத்தாரர்களுக்கு Letter of Acceptance (L.A.O.) வழங்குவதற்கு மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்.2750/12/இ1)

**தீர்மானம் எண்.445. அலுவலக குறிப்பு ஏற்று கொள்ள ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண்.21**

இந்நகராட்சியில் ஒருங்கிணைந்த நகர்ப்புற வளர்ச்சி குழுமம் 2012–2013 (IUDM) திட்டத்தின்கீழ் மேற்கொள்ளப்படவுள்ள பணிகளுக்கு இந்நகர்மன்றம் தனது தீர்மானம் எண்.390 நாள் 28.09.2012 –ன் மூலம் ஏற்கனவே ஒப்புதல் அளித்துள்ளது. அதனடிப்படையில் திடக்கழிவு மேலாண்மை திட்டப் பணிகளில் இந்நகராட்சிக்கு சொந்தமான கலவை உரக்கிடங்கில் வேலி அமைத்தல் மற்றும் விஞ்ஞான ரீதியில் நிரப்பும் பணிகள் (Scienctific land filling arrangements) ரூ.32.00 இலட்சத்தில் மேற்கொள்வதற்கு சிப்பம் முறையில் (சிப்பம் எண். 9) 31.10.2012 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளின் Technical Bids திறக்கப்பட்டு, அதன் பின்னர் தொழில் நுட்ப தகுதிவாய்ந்த ஒப்பந்தத்தாரர்கள் முன்னிலையில் 19.11.2012 அன்று Price Bid திறக்கப்பட்டது. அதன் ஒப்புநோக்கு பட்டியல் பின்வருமாறு :

| வ.எண். | ஒப்பந்தத்தாரர் பெயர் மற்றும் முகவரி | சிப்பம் எண். | ஒப்பந்த மதிப்பீட்டு தொகை ரூ. | ஒப்பந்தப்புள்ளி சதவிகிதம் |
|---|---|---|---|---|
| 1<br><br>2 | திரு.T.ஜாண்ரெக்ஸலின் ஜோஸ் ஒப்பந்தத்தாரர்<br><br>திரு.C.தேவகரிம் சாம் ஒப்பந்தத்தாரர் | IX | 3200000 | மதிப்பீட்டை விட 0.01% குறைவு. (ரூ.3022324/– )<br><br>மதிப்பீட்டை விட 1.39% அதிகம். (ரூ.3064755/–) |

மேற்படி ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டைவிட 0.01% குறைவாக ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள திரு.T.ஜாண்ரெக்ஸலின் ஜோஸ், ஒப்பந்தத்தாரரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்று Letter of Acceptance (L.A.O.) வழங்குவதற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு:** குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள திரு.T.ஜாண்ரெக்ஸலின் ஜோஸ், ஒப்பந்தத்தாரருக்கு Letter of Acceptance (L.A.O.) வழங்குவதற்கு மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்.2750/12/இ1)

**தீர்மானம் எண்.446. அலுவலக குறிப்பு ஏற்று கொள்ள ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

(ஒம்) அ.நசீர்,
நகர்மன்றத் தலைவர்
குளச்சல் நகராட்சி

(உண்மை நகல்)

ஆணையர்(பொ)
குளச்சல் நகராட்சி

## குளச்சல் நகராட்சி

குளச்சல் நகராட்சி மன்றத்தின் அவசரக்கூட்டம் 2012 நவம்பர் திங்கள் 30.11.2012–ம் நாள் வெள்ளிக்கிழமை முற்பகல் 11.30 மணிக்கு நகர்மன்ற கூட்ட அரங்கில் வைத்து நடைபெற்றது.

முன்னிலை:
நகர்மன்ற தலைவர்
குளச்சல் நகர்மன்றம்.

**பொருள் எண்.1**
**குளச்சல் நகர்மன்றத் தலைவர் அவர்கள் கொண்டுவரும் தீர்மானம்**
குளச்சல் 24–வது வார்டு மார்க்கெட் ரோடு பின்புறம் அமைந்துள்ள சாலையானது பல தலைமுறையாக காமராஜ் சாலைக்கு வருவதற்காக அனைத்து சமுதாய பொதுமக்களாலும் பயன்படுத்தப்பட்டு வருகிறது. தற்போது மேற்படி பாதையானது தங்களுக்கு உரிமைப்பட்ட பட்டா பூமி என்பதால் அதனை பொதுமக்கள் பாதையாக பயன்படுத்தக் கூடாது என களிமார் பகுதியை சார்ந்த நபரால் தடங்கல் செய்யப்பட்டுள்ளது. எனவே மேற்படி வழிப்பாதை தற்போது பொதுமக்கள் பயன்படுத்துவதை போன்று தொடர்ந்து பயன்படுத்துவதற்கு தகுந்த நடவடிக்கை மேற்கொள்வதற்கு மன்றம் தீர்மானிக்கலாம்.
**தீர்மானம் எண்.447. அலுவலக குறிப்பு ஏற்று கொள்ள ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 2**
இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.17–ல் சாஸ்தாகோவில் முன்புறம் பள்ளமாக உள்ளதால், மழைக் காலங்களில் மழைநீர் தேங்கி சேறும் சகதியுமாக பொதுமக்களுக்கு நோய் பரவும் நிலையில் உள்ளது. எனவே பொதுமக்கள் நலனை கருத்தில் கொண்டு மேற்படி இடத்தில் பேவர் பிளாக் சாலை அமைப்பதற்கு ஆகும் மதிப்பீட்டுத் தொகை ரூ.1,76,000/–க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.
**<u>அ.குறிப்பு</u>**: மன்றம் அனுமதி வழங்கலாம்.
(ந.க.எண்.4442/2012/இ1)
**தீர்மானம் எண்.448. அலுவலக குறிப்பு ஏற்று கொள்ள ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 3**
இந்நகராட்சிப் பகுதியில் சுற்றித்திரியும் நாய்கள் பொதுமக்களுக்கு பெரிதும் அச்சுறுத்தலாக உள்ளதால் அந்நாய்கள் மற்றும் வீட்டு நாய்களின் இனப்பெருக்கத்தை கட்டுப்படுத்த பிறப்புக் கட்டுப்பாடு அறுவை சிகிச்சை செய்யும் பொருட்டு 2012 ஆம் ஆண்டிற்கான நாய்களின் கணக்கெடுப்பு செய்யப்பட்டதில் 151 நாய்கள் தெருவில் சுற்றித் திரிவதாக கணக்கிடப்பட்டுள்ளது. அறுவை சிகிச்சை செய்வதற்கு நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கு துறை அரசாணை நிலை எண்.106 நாள் 10.06.2008–ல் நாய் ஒன்றுக்கு ரூ.445/– என தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும் பணி முடித்த பின்பு மேற்படி செலவினத்தில் 50% தொகையினை இந்திய பிராணிகள் நல வாரியத்திலிருந்து மீளப்பெறவும் அரசாணையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், திருநெல்வேலி அவர்களின் ஆய்வுக்கூட்ட கடிதம் எண்.53/2010/ஆ1 நாள் 20.11.2012–ன்படி 21.11.2012–ம் தேதிய ஆய்வுக் கூட்டத்தில் மேற்குறிப்பிட்டுள்ள நாய்களுக்கு விரைவாக கருத்தடை அறுவை சிகிச்சையினை உரிய முறைப்படி மேற்கொள்ள தெரிவிக்கப்பட்டது. எனவே பொதுமக்களுக்கு அச்சுறுத்தலாக சுற்றித்திரியும் 151 நாய்களை பிடித்து உரிய முறைப்படி பிறப்புக் கட்டுப்பாடு அறுவை சிகிச்சை மேற்கொள்ள நாய் 1–க்கு ரூ.445/– வீதம் மொத்தம் ரூ.67,195/–க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.
**<u>அ.குறிப்பு</u>**: மன்றம் அனுமதி வழங்கலாம். (ந.க.எண்.2868/09/எச்1)
**தீர்மானம் எண்.449. அலுவலக குறிப்பு ஏற்று கொள்ள ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 4**

இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.22–ல் பந்தவிளை குறுக்கு தெருவில் வீட்டு எண். 22–36/5 முதல் மின்கம்பம் எண். FII/30 வரையிலான பகுதி மண் சாலையாக குண்டும், குழியுமாக உள்ளதால் மழைநீர் வெளியே செல்ல முடியாமல் தேங்கி நின்று சுகாதாரக் கேடு ஏற்பட்டு வருகிறது. எனவே மேற்படி பகுதியில் வடிகால் ஓடை அமைத்து பேவர் பிளாக் சாலை அமைப்பதற்கு ஆகும் மதிப்பீட்டுத் தொகை ரூ.3,25,000/–க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு** : இந்நகராட்சியின் நிதி ஆதாரத்தை உத்தேசித்து மேற்படி பணியினை திட்ட நிதி அல்லது பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.4465/12/இ1)

**தீர்மானம் எண்.450. அலுவலக குறிப்பு ஏற்று கொள்ள ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 5**

இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.13, துறைமுகத்தெரு–1–ல் அமைந்துள்ள மீனவர் ஓய்வறையின் படிக்கட்டுகள் மற்றும் தரை ஆகியவை மிகவும் மோசமாக சேதமடைந்துள்ளதால் மேற்படி ஓய்வறையின் பழுதுகளை சரி செய்து தரையில் டைல்ஸ் பதிப்பதற்கு ஆகும் மதிப்பீட்டுத் தொகை ரூ.1,00,000/–க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு** : இந்நகராட்சியின் நிதி ஆதாரத்தை உத்தேசித்து மேற்படி பணியினை திட்ட நிதி அல்லது பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.4379/12/இ1)

**தீர்மானம் எண்.451. அலுவலக குறிப்பு ஏற்று கொள்ள ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 6**

இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.3–ல் செக்காலத்தெரு மற்றும் சன்னதி தெரு முதல் வெள்ளிப்பிள்ளையார் கோவில் செல்லும் பிரதான சாலையில் உள்ள குறுக்கு தெருக்களில் கழிவுநீர் மற்றும் மழைநீர் வெளியே செல்ல முடியாமல் தேங்கி நிற்பதால் பொது சுகாதாரக் கேடு உருவாகும் நிலை ஏற்பட்டுள்ளது. எனவே மேற்படி தெருக்களில் வடிகால் ஓடை அமைத்து பேவர் பிளாக் சாலை அமைப்பதற்கு ஆகும் மதிப்பீட்டுத் தொகை ரூ.5,40,000/–க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு** : இந்நகராட்சியின் நிதி ஆதாரத்தை உத்தேசித்து மேற்படி பணியினை திட்ட நிதி அல்லது பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண். 674/12/இ1)

**தீர்மானம் எண்.452. அலுவலக குறிப்பு ஏற்று கொள்ள ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 7**

இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.22–ல் பந்தவிளை குறுக்கு தெருவில் ஏற்கனவே உள்ள வடிகால் ஓடை மிகவும் மோசமாக சேதமடைந்துள்ளதாலும், மேற்படி தெருவின் கழிவுநீரை சேர்ப்பதற்காக அமைக்கப்பட்டுள்ள சிறுபாலம் மிகவும் சிறியதாக உள்ளதாலும், கழிவுநீர் சீராக செல்ல இயலாமல் சாலையின் மேற்பரப்பில் தேங்கி சுகாதாரக் கேட்டை உருவாக்கும் சூழ்நிலை ஏற்பட்டுள்ளது. எனவே மேற்படி தெருவில் வடிகால் ஓடை அமைத்து சிறுபாலம் அமைக்கவும், பேவர் பிளாக் சாலை அமைக்கவும் ஆகும் மதிப்பீட்டுத் தொகை ரூ.3,10,000/–க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு** : இந்நகராட்சியின் நிதி ஆதாரத்தை உத்தேசித்து மேற்படி பணியினை திட்ட நிதி அல்லது பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.4466/12/இ1)

**தீர்மானம் எண்.453. அலுவலக குறிப்பு ஏற்று கொள்ள ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 8**

இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.12, துறைமுகத்தெருவில் அமைந்துள்ள மீனவர் ஓய்வறை மிகவும் பழுதடைந்து தரை மற்றும் சுவர்கள் உடைந்த நிலையில் உள்ளது. எனவே

மேற்படி மீனவர் ஒய்வறையினை பழுது நீக்கம் செய்வதற்கு ஆகும் மதிப்பீட்டுத் தொகை ரூ.1,00,000/—க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு** : இந்நகராட்சியின் நிதி ஆதாரத்தை உத்தேசித்து மேற்படி பணியினை திட்ட நிதி அல்லது பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.4467/12/இ1)

**தீர்மானம் எண்.454. அலுவலக குறிப்பு ஏற்று கொள்ள ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 9**

இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.17—வது வார்டில் களிமார் பாலத்தின் அருகில் பொதுமக்கள் பயன்பாட்டிற்காக ஏற்கனவே கட்டப்பட்டிருந்த படித்துறைக்கு மேலாக புதிதாக பாலம் கட்டப்பட்டதால் ஆற்றில் குளிக்க இயலாமல் பொதுமக்கள் மிகுந்த சிரமத்திற்கு உள்ளாகி வருகின்றனர். எனவே பொதுமக்கள் நலனை கருத்தில் கொண்டு, மேற்படி பாலத்தின் அருகில் புதிதாக படித்துறை அமைக்க பொதுப்பணித் துறைக்கு கடிதம் அனுப்ப மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அ.குறிப்பு</u>**: மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்.4429/12/இ1)

**தீர்மானம் எண்.455. அலுவலக குறிப்பு ஏற்று கொள்ள ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 10**

இந்நகராட்சிக்குட்பட்ட KSSS காலனி மேல்நிலை நீர்த்தேக்க தொட்டியிலிருந்து குடிநீர் வினியோகம் தெருக்களில் முதலாவது தெரு மட்டும் UELC காலனியில் உள்ள இரண்டு தெருக்களில் உள்ள மேடான பகுதிகளில் உள்ள வீடுகள் மற்றும் UELC காலனி அடுத்துள்ள இரண்டு தெருக்களிலும் மேடான பகுதிகளில் உள்ள வீடுகளிலும் குடிநீர் வினியோகம் சீராக இல்லை. எனவே குடிநீரின் அவசரம் அவசியம் கருதி KSSS காலனி மேல்நிலை நீர்த்தேக்க தொட்டியிலிருந்து புதிதாக HDPE மற்றும் PVC Pipe line அமைத்து பழைய லைனுடன் லிங்க் செய்து மேற்படி தெருக்களுக்கு குடிநீர் வழங்க தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டு தொகை ரூ.30,000/—க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அ.குறிப்பு</u>**: மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்.4472/12/இ2)

**தீர்மானம் எண்.456. அலுவலக குறிப்பு ஏற்று கொள்ள ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண்.11**

குளச்சல் நகராட்சிக்குட்பட்ட ஈழக்காணிவிளையில் கதவு எண்.15—180/6 முதல் அடுத்துள்ள மூன்று தெருக்களில் (St.Mary's Primary School அருகில்) குடிநீர் வினியோகம் இல்லை. எனவே அங்குள்ள பொதுமக்கள் அளித்துள்ள புகார் மனுவின் அடிப்படையிலும், மேலும் குடிநீரின் அவசரம் அவசியம் கருதி புதியதாக லைன் போட்டு மெயின் லைனுடன் லிங்க் செய்வதற்கு மேற்படி இடம் பார்வையிட்டு தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டு தொகை ரூ.48,000/—க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அ.குறிப்பு</u>**: மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்.4464/12/இ2)

**தீர்மானம் எண்.457. ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

(ஒம்) அ.நசீர்,
நகர்மன்றத் தலைவர்
குளச்சல் நகராட்சி

(உண்மை நகல்)

ஆணையர்(பொ)
குளச்சல் நகராட்சி